# கல்குடா கல்வி வலய கோட்ட மட்டப் பரீட்சை – 2017
# இரண்டாந் தவணை

| தரம் : 06 | தமிழ் மொழியும் இலக்கியமும் | நேரம் : 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டெண்/பெயர் ______________________ புள்ளி

**பகுதி - I**

***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***

☞ **மிகப் பொருத்தமான விடையைத் தெரிசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

01) "அடிசில் சமைப்பதற்கு அடுப்புக்குதவிடுவேன்" இங்கு அடிசில் என்பதன் ஒத்த கருத்துச் சொல்
1) விறகு 2) உணவு 3) பாத்திரம் 4) காற்று

02) "அந்தப்புரத்தில் பாண்டிமா தேவியோடு பாங்கியரும் அருகில் அமர்ந்திருந்தனர்" இதில் வரும் பாங்கி என்பதன் ஒத்தகருத்துச் சொல்
1) தேவி 2) பாடகி 3) தோழி 4) அரசி

03) "செல்வந்தனின் ஆசைக்கு அளவேயில்லை" இங்கு ஆசை என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
1) நிராசை 2) பேராசை 3) விருப்பம் 4) துர் ஆசை

04) "புகழுக்குரிய செயல்களே எமக்குப் பெருமை சேர்ப்பன" இங்கு புகழ் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
1) இகழ் 2) விருப்பம் 3) ஒழுக்கம் 4) அகழ்

05) உழவன் வயலில் வேலை செய்தான். இங்கு உழவன் என்பதன் எதிர்பாற் சொல்
1) உழவி 2) உழத்தினி 3) உழவினி 4) உழத்தி

06) தமிழிலுள்ள உயிர்மெய் எழுத்துக்களின் எண்ணிக்கை
1) 216 2) 247 3) 30 4) 12

07) "காற்றுள்ள போதே தூற்றிக்கொள்" எனும் பழமொழியின் கருத்து
1) காற்று வீசும் போது நெல்லைத் தூற்ற வேண்டும்
2) சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும்
3) காற்று வீசும் போது பொருட்கள் பறக்கும்
4) காற்றடித்தால் மட்டுமே தூற்றலாம்

08) மூவிடப் பெயர்களில் கேட்போனை சுட்டும் பெயர்
1) தன்மை 2) முன்னிலை 3) படர்க்கை 4) பன்மை

Log on. - www.knightcreations.lk

09) "இராதை அழகாக நடனம் ஆடினாள்" இவ்வாக்கியத்தின் எழுவாய்
1) நடனம் 2) இராதை 3) ஆடினாள் 4) அழகாக

10) சொற்களைத் தனித்தனியாகவோ, அடுக்கடுக்காகவோ பிரிக்கும்போது இடப்படும் நிறுத்தற் குறி
1) காற்புள்ளி 2) முற்றுப்புள்ளி 3) வினாக்குறி 4) முக்காற் புள்ளி

11) யானை பிளிறும் என்பது போல் குரங்கு
1) சீறும் 2) அலப்பும் 3) உறுமும் 4) கதறும்

12) சரியான முறையில் எழுத்துக்கூட்டப்பட்ட சொல்
1) தொழிலாழி 2) தொழிலாளி 3) தொழிலாலி 4) தொளிலாளி

13) வெயில் காலத்தில் பருகுவதற்கு ............................. சிறந்தது.
1) இழநீர் 2) இலநீர் 3) இளநீர் 4) இளனீர்

14) சொற்களை அகர வரிசைப்படி குறிப்பிட்டு அவற்றின் பொருளைத் தெரிவிக்கும் நூல்
1) அகராதி 2) பஞ்சாங்கம் 3) நிகண்டு 4) கலைக்களஞ்சியம்

15) "பாடசாலையில் வருடாந்த பரிசளிப்பு விழா நடைபெற்றது" இவ்வாக்கியம் உணர்த்தும் காலம்
1) நிகழ்காலம் 2) எதிர்காலம் 3) இறந்தகாலம் 4) வசந்தகாலம்

16) பின்வருவனவற்றுள் உயர்திணையைக் குறிப்பது
1) ஆசிரியர் 2) கதிரை 3) பாடசாலை 4) எறும்பு

17) 2004ம் ஆண்டு ஏற்பட்ட ............... ப் பேரலை அநேக மக்களைத் துன்பத்துக்குள்ளாக்கியது.
1) ஆலி 2) ஆளி 3) ஆழி 4) ஆழ

18) "வானில் ஆமையைக் கௌவிக் கொண்டு சென்ற அன்னங்களைக் கண்ட சிறுவர்கள் சிரித்துச் சிரித்துக் கூச்சல் போட்டனர்" இதில் வந்துள்ள சிரித்துச் சிரித்து என்பது
1) இரட்டைக்கிளவி 2) இணைமொழி 3) அடுக்குமொழி 4) அடுக்கிடுக்குத் தொடர்

19) தம்பியும், தங்கையும் நேற்றுக் கோயிலுக்குப் ..............................................
1) போவார்கள் 2) போகிறார்கள் 3) போனார்கள் 4) போவோம்

20) இருபத்தைந்தாவது ஆண்டில் கொண்டாடப்படும் விழா
1) வைரவிழா 2) பொன்விழா 3) பவள விழா 4) வெள்ளிவிழா

**(2 x 20 = 40 புள்ளிகள்)**

Log on:-www.knightcreations.tk

## பகுதி - II

☞ முதலாம், இரண்டாம் வினாக்களிற்கு கட்டாயமாக விடையளிப்பதோடு, ஏனையவற்றில் மூன்று வினாக்களை தெரிவு செய்து ஐந்து வினாக்களிற்கு விடையளிக்குக.

01. பின்வரும் தலைப்புக்களுள் ஒன்றினைத் தெரிவு செய்து 125 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை ஒன்று எழுதுக.

1) நான் விரும்பும் பெரியார்

2) பத்திரிகையின் பயன்பாடு

3) நான் கண்டு களித்த காலைக்காட்சி

4) உடைந்த குடையின் சுயசரிதை

5) நான் வைத்தியரானால்

(20 புள்ளிகள்)

02. பாடசாலையில் நடைபெறவுள்ள வருடாந்த பரிசளிப்பு விழாவிற்கு வருகை தருமாறு உமது நண்பன் / நண்பிக்கு 50 சொற்களில் அழைப்புக் கடிதம் ஒன்றை எழுதுக.

(10 புள்ளிகள்)

03. பாடநூல் தொடர்பான பின்வரும் வினாக்களிற்கு விடை எழுதுக.

1) "எலியும் சேவலும்" எனும் கவிதை நாடகத்தை எழுதியவர் யார்?

2) தென்னை மரத்தின் பயன்கள் இரண்டு தருக.

3) "கண்ணகி வழக்குரைத்தல்" எனும் பாடத்தில் வரும் கதாபாத்திரங்கள் இரண்டினைத் தருக.

4) புதிய ஆத்திசூடியை இயற்றியவர் யார்?

5) செய்ந்நன்றி அறிதல் என்றால் என்ன?

(5 x 2 = 10 புள்ளிகள்)

04. பின்வரும் சொற்களின் பொருள் விளங்குமாறு வாக்கியம் அமைக்குக.

அ) அலகு

ஆ) கரை

இ) மணம்

ஈ) ஒளி

உ) ஊண்

(2 x 5 = 10 புள்ளிகள்)

Log on:- www.knightcreations.tk

**05. பின்வரும் பாடலைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

"ஓடி விளையாடு பாப்பா
நீ ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா
ஒரு குழந்தையை வையாதே பாப்பா

சின்னஞ் சிறு குருவி போலே
நீ பறந்து திரிந்து வா பாப்பா
வண்ணப் பறவைகளைக் கண்டு - நீ
மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா

பொய் சொல்லக் கூடாது பாப்பா
என்றும் புறம் சொல்லல் ஆகாது பாப்பா
தெய்வம் நமக்குத் துணை பாப்பா
ஒரு தீங்கும் வரமாட்டாது பாப்பா"

1) இப்பாடலின் ஆசிரியர் யார்?

2) "ஒரு குழந்தையை வையாதே" என்ற தொடரின் பொருள் யாது?

3) எதனைப் போல பறந்து திரியும்படி ஆசிரியர் கூறுகிறார்?

4) யார் நமக்குத் துணை என்று கூறப்பட்டுள்ளது?

5) பின்வரும் சொற்களுக்கு ஒத்த பொருள் தருக.
   1) மகிழ்ச்சி
   2) கடவுள்

(2 x 5 = 10 புள்ளிகள்)

**06. பின்வரும் வாக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு அட்டவணையைப் பூர்த்தி செய்க.**

அ) தமிழினி பரீட்சை எழுதுகின்றாள்

ஆ) நாங்கள் கோயிலுக்குச் சென்றோம்

இ) பசுக்கள் கதறுகின்றன

ஈ) புலவர்கள் அரசனை வாழ்த்துவர்

உ) நீங்கள் எங்கே செல்கிறீர்கள்?

| | திணை | பால் | இடம் | காலம் |
|---|---|---|---|---|
| அ) | | | | |
| ஆ) | | | | |
| இ) | | | | |
| ஈ) | | | | |
| உ) | | | | |

(½ x 20 = 10 புள்ளிகள்)

Log on:-www.knightcreations.tk